தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1996, பிப்ரவரி 22, வியாழக்கிழமை,

மாசி 10, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2027

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ச. காந்திராஜன் அவர்கள் தலைமையில் காலை 10.05 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்".

குற்றமற்ற சில சொற்களால் எதையும் தெளிவாகச் சொல்ல முடியாதவர்கள்தான் பல சொற்களைத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்க விரும்புவார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். இன்றையதினம் இந்த வினாக்களில் சில மாண்புமிகு அமைச்சர்கள் இங்கே தங்களுக்கான வினாக்களைப் பின்னர் எடுத்துக்கொள்ளுமாறு என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதனடிப்படையில், மாண்புமிகு சட்ட மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்களுடைய வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 85, திருமதி மரியம் உல் ஆசியா, இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

85—

கட்டடப் பயிற்சி மையங்கள் அமைத்தல்

87749—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் கட்டடப் பயிற்சி மையங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு சில மாவட்டங்களில்தான் கட்டிட மையங்கள் இருக்கின்றன. வீட்டு வளர்ச்சித் துறையின் அவசியத்தை முன்னிட்டும் ஏழைகளுக்கும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் வீடுகள் கட்டித் தரும்பொருட்டும் அனைத்து மாவட்டங்களிலும் அல்லது எல்லா நகரங்களிலும் புதிதாக மாவட்ட கட்டிட மையங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டங்களிலும் கட்டிட மையங்கள் செயல்படுத்துவதற்கான உரிய ஆணைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அதிலே, தற்போது 22 மாவட்டத் தலைநகரங்களிலே பல மாவட்டத் தலைநகரங்களில் துவங்கப்பட்டு இருக்கின்றன, சிலவற்றிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கரூர்-தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டம் மற்றும் பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம் தவிர மீதமுள்ள 22 மாவட்டத் தலைநகரங்களிலே கட்டிட மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்தக் கட்டிட மையங்கள் எல்லாம் திறக்கப்பட்டு இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே எந்த குவாலிஃபிகேஷனை வைத்து-அடிப்படை பள்ளிப் படிப்பை முடித்தவர்களுக்கு நீங்கள் டிரெயினிங் கொடுக்கப் போகிறீர்களா? அல்லது டிப்ளமா படித்தவர்களை அல்லது டிகிரி படித்தவர்களை வைத்து — நீங்கள் டிரெயினிங் கொடுக்கப் போகிறீர்களா என்பதை அறிய முற்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிட மையங்கள், கட்டிடத் தொழில் நுட்பத்தைப் பரிமாற்றம் செய்து கொடுக்கும் மையங்களாகவும், கட்டிடக் கலைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் மையங்களாகவும் அரசு மற்றும் தனியார் வீட்டு வசதி, கட்டிட வசதி திட்டங்களில் குறைந்த செலவில் நிறைந்த பயன் கிடைக்கும் வெவ்வேறு கட்டிடத் தொழில் நுட்பங்களைப்

பின்பற்றி உற்பத்தி கட்டுமான மையங்களாகவும் செயல்படும். எனவே, கட்டிடக் கலைஞர்களுக்கு பயிற்சி அளிக்கின்ற இடமாக இருக்கும்.

முற்பகல் 10.10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடப் பயிற்சி மையங்கள் அமைக்கும்போது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள மண் வகைகளையும், அங்கே கிடைக்கும் பொருட்களின் தரத்தினையும் அறிந்து அதற்கேற்றாற்போல் பாடத் திட்டங்களை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு 'லோ காஸ்ட் டெக்னாலஜி' அடிப்படையிலே, குறைந்த தொழில் நுட்பத்திலே கட்டிடங்கள் கட்டுவதற்கு பயிற்சி தரப்படுகிற ஒரு அமைப்பாகுமே தவிர. அங்கே வேறெந்த பாடத் திட்டங்களும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத் தொழில் செய்கின்றவர்களுக்கு படிப்போ, பயிற்சியோ கொடுக்கின்றபோது, அவர்களுடைய படிப்பறிவைவிட அவர்களுடைய சொந்த அறிவுதான் வேலை செய்கிறது. ஆகவே, கட்டிடத் தொழில் செய்கின்றபோது ஆர்கிடெக்ட் என்கிற ஒரு சில படித்தவர்கள் லட்சக்கணக்கான ரூபாயை கட்டிட வரைபடங்களுக்காக வாங்குகிற அந்த முயற்சியை முறியடிக்கின்ற விதத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டிடத் தொழில் புரிகின்றவர்களில் படித்த பட்டதாரிகளாக இருப்பவர்களுக்கு இந்த அளவுக்கு ஒரு பயிற்சியைக் கொடுத்து அவர்களையும் ஊக்குவிப்பதற்கு முன்வருவார்களா, அந்த திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறைந்த தொழில் நுட்பத்திலே கட்டிடங்கள் கட்டுவதற்காக பயிற்சியைத் தருகிற மையங்கள்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்றைக்கு மத்திய அரசின் உதவியோடு துவங்கப்படுகின்ற இந்த மையங்களாகும். எனவே அந்த வகையிலே

மாவட்டங்களில் நம்முடைய சத்துணவுக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், அதைப்போல தொகுப்பு வீடுகள் போன்றவற்றையெல்லாம் கட்டுகின்றபோது குறைந்த தொழில் நுட்பத்தை அதாவது லோ காஸ்ட் டெக்னாலஜியை அடிப்படையாகக் கொண்டு, அதைப் பயன்படுத்தி கட்டிடம் கட்டுவதன் மூலமாக கட்டுமானச் செலவுகளைக் குறைக்கலாம் என்பதற்காக அங்கே பயிற்சிகள் தரப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடப் பயிற்சி இல்லாமலேயே உத்தேசமாக சிலபேர், கட்டிடத் தொழில் செய்பவர்கள் அவர்களே கட்டிடம் கட்டுவதற்கு பிளான்கள் போட்டு கட்டிடங்கள் கட்டுகிறார்கள். அதனால் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன. கட்டிடம் கட்ட பயிற்சி பெற்றவர்கள், முனிசிபாலிட்டியிலோ, பி.டபிள்யூ.டி.யிலோ, பி.டபிள்யூ.டி. கட்டிடம் கட்டுவதற்கோ அல்லது வீட்டு வசதி வாரியக் கட்டிடம் கட்டுவதற்கோ அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைக்கு சேர்க்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடப் பயிற்சி மையங்கள் என்பது தொழில் நுட்பத்தை அதாவது குறைந்த செலவிலே அவர்கள் தொழில் நுட்பத்தைக் கற்றுக்கொண்டு, அந்தக் கட்டிடத்தினுடைய செலவுகளைக் குறைப்பதற்காக சொல்லிக் கொடுக்கப்படுகின்ற ஒரு அமைப்பே தவிர இதிலே வரைபடம் போடுதல், அடுத்ததாக பொதுப்பணித் துறையிலே கட்டிடம் கட்டுதல், வீட்டுவசதி வாரியத் துறையிலே கட்டிடம் கட்டுதல் போன்றவற்றிற்காக அல்ல. ஒரு வேளை அவர்கள் எல்லாம் இந்த லோ காஸ்ட் டெக்னாலஜியைப் பயன்படுத்த வேண்டும் என்று விரும்பினால், அவர்களுக்கும் இந்த பயிற்சி தரப்படும். அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் இந்த கட்டிடப் பயிற்சி மையங்களில் லோ காஸ்ட் டெக்னாலஜியிலே சிலவற்றைச் செய்கிறார்கள். அந்த வகையிலே பெண்களை முன்னேற்றிக் கொண்டிருக்கிற தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே பெண் பொறியாளர்களுக்கும் முன்னுரிமை தந்து, இது ஒரு சிறப்புத் திட்டமாக எந்த மாவட்டத்திலாவது, குறிப்பாக, வடாற்காடு -அம்பேத்கார் மாவட்டத்தில் செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1996 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழில் மையத்திலே பயிற்சி பெறுவதற்கு யார் வேண்டுமென்றாலும் அங்கே சென்று அந்த லோ காஸ்ட் டெக்னாலஜியை படித்துக்கொள்ளலாம். அங்கே ஆண்கள்தான் பயில வேண்டும் அல்லது பெண்களுக்குத் தான் பயிற்சி கொடுக்கப்படும் என்றில்லை. யார் வேண்டுமானாலும் பயிற்சி எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. கோவிந்தராசு.

திரு. மா. கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு ஏதாவது தனியாக லைசன்ஸ் தருமா அல்லது வேலை வாய்ப்பில் அவர்களுக்கு முன்னுரிமை தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி அவர்களுக்குத் தனியாக எந்தவிதமான முன்னுரிமையும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 86, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

86—

விவசாயப் பல்கலைக் கழகம் அமைத்தல்

***82017 திரு. கு. சீனிவாசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடியில் விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடியில் விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10.15

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS